https://puthusudar.lk/

puthusudar / புதுசுடர்

புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

04Th FEBRUARY 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 65

சுதந்திர தின நிகழ்வில் தமிழில் தேசிய கீதம்

ஜனாதிபதியின் உரை இல்லை

தாய்லாந்து மொழியிலும் அறிவிப்பு

கொழும்பு காலி முகத்திடலில் இன்று இடம்பெற்ற இலங்கையின் 76 ஆவது சுதந்திர நிகழ்வில் வழமைக்கு மாறாக தமிழ் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

02

சனத் நிஸாந்தவின் மனைவி எம்பியாகிறார்?

காலஞ்சென்ற மொட்டு கட்சியின் எம்பி சனத் நிஸாந்தவின் மனைவியை அரசியலுக்கு கொண்டுவருவதற்கும் அவருக்கு தேசிய பட்டியல் எம்பி பதவியை வழங்குவதற்கும் மொட்டு கட்சியின் இளம் எம்பிக்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர் என்று அறிய முடிகிறது.

இந்த முயற்சிக்கு மொட்டு கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களின் ஆசிர்வாதமும் இருப்பதால் சனத் நிஸாந்தவின் மனைவி விரைவில் எம்பியாகக்கூடும் என்கிறது மொட்டு வட்டாரம்.

ஜனாதிபதி தேர்தலில் ரணிலுக்கு ஆதரவில்லை

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கமாட்டோம் என்று மொட்டு கட்சி அவரிடம் நேரடியாகவே கூறிவிட்டது.

முதலாம் திகதி ஜனாதிபதிக்கும் மொட்டு கட்சிக்கும் இடையில் ஜனாதிபதியின் இல்லத்தில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

அப்போது ஜனாதிபதி தேர்தல்பற்றி ஜனாதிபதி மொட்டு கட்சியிடம்

02

ராதா கிருஷ்ணா
சீதா ராம்
ஸ்ரீ பாலாஜி
நரசிம்மர்

ஹரே கிருஷ்ணா

ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம்

புது ஆலயத்திற்கான வர்ணபூச்சு வேலைகளும் மற்றும் முடிவு வேலைகளும் நடைபெற்று கொண்டிருக்கின்றன

உயரமான கோபுரம் தசவதார மூர்த்திகள், பளிங்கு தரைகள் மற்றும் கண்கவர் வேலைபாடுகள்.

வர்ணபூச்சுக்கான மதிப்பீடு
ரூபா.5,000,000/= (5 மில்லியன்)
அன்பான பக்தர்களே நீங்களும்
இச்சேவையில் பங்கு பற்றி
விரைவில் கும்பாபிஷேகம் செய்து
பகவானின் அருளை பெறுவோமாக.

Bank Detials

Commercial Bank
Bank Branch - Kotahena Branch
Account Name - ISKCON -TEMPLE FUND
Account No. - 1120017042
Swift Code - CCEYLKLX

Hatton National Bank
Bank Branch - Jempettah Street
Account Name - ISKCON
Account No. - 207010000891
Swift Code - HBLILKLX

சர்வதேச கிருஷ்ண பக்தி கழகம்

ஸ்தாபக ஆச்சாரியார்: அருட்திரு அ. ச. பக்தி வேதாந்த சுவாமி ஸ்ரீல பிரபுபாதா

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே

+94 772288166 ☎ +94 112433325
188, புதுச்செட்டித் தெரு, கொழும்பு- 13
E-Mail: info@iskconsrilanka.org Web: www.iskcon.lk

ISKCON SRI LANKA

புதுசுடர்
www.puthusudar.lk
2024 FEBRUARY 04 - SUNDAY

சுதந்திரமில்லா சுதந்திரம்

எமது நாடு வெள்ளைக்காரர்களின் காலனித்துவ ஆட்சியில் இருந்து விடுபட்டு இன்றோடு 76 வருடங்களாகின்றன.அதைக் கொண்டாடும் வகையில் நாட்டின் எல்லா பகுதிகளிலும் இன்று பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

பிரதான நிகழ்வு கொழும்பு காலிமுகத் திடலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் இடம்பெற்றது.

இருப்பினும்இஓரிரு வருடங்களாக இந்த நாட்டு மக்கள் சுதந்திர தினத்தின்மீது அவ்வளவு அக்கறை செலுத்தவில்லை.இந்தத் தடவையும் அப்படித்தான்.

அதற்குக் காரணம் பொருளாதார நிலைமைதான்.மக்களின் முழுக் கவனமும் வயிற்று பசியைப் போக்குவதில்தான் தங்கியுள்ளது.

அன்றாட உணவுகளை எப்படித் தேடுவதுஇபிள்ளைகளை எப்படி படிக்க வைப்பதுஇஎன்ன தொழில் செய்வது போன்ற கேள்விதான் நாட்டு மக்களின் மனங்களில் இப்போது நிறைந்திருக்கிறது.

காலையில் எழுந்து இவற்றை நோக்கித்தான் மக்கள் ஓடுகிறார்கள்.இந்த நிலையில் சுதந்திர தினத்தை மாத்திரமல்ல எந்தவொரு நிகழ்வையும் அவர்களால் கொண்டாட முடியாது.

சிலருக்கு இன்று சுதந்திர தினம் என்று கூடத் தெரியாது.. அவ்வாறானவர்களின் கருத்து என்னவென்றால் இந்த நாடு வெள்ளைக்காரர்களிடமே இருந்திருக்கலாம் என்பதுதான். அந்தளவு விரக்தியில் உள்ளார்கள் மக்கள்.

வெள்ளைக்காரர்களின் ஆட்சியின் கீழ் இந்த நாடு தொடர்ந்தும் இருந்திருந்தால் இந்தளவுக்கு நாடு பொருளாதார வீழ்ச்சிக்கு சென்றிருக்காது இஊழல்இமோசடிகள் இடம்பெற்றிருக்காதுஇநாடு முழுமையாக அபிவிருத்தி அடைந்திருக்கும்இஇனவாதம் தோன்றி இருக்காது என்பது இந்த மக்களின் கருத்து.

பாதிக்கப்பட்ட மக்களின் கருத்துக்கள் அப்படித்தான் இருக்கும் .தேசிய உணர்வே அழிந்து போகும் அளவுக்கு மாறியுள்ளது அவர்களின் நிலைமை.அதற்குக் காரணம் அவர்களின் கழுத்தை நெறிக்கும் பொருளாதார நிலைமையாகும்.

நாடு தொடர்பில் எதைப்பற்றியும் சிந்திக்கும் நிலைமையில் மக்கள் இப்போது இல்லை.ஆட்சி மாற வேண்டும். பொருளாதார நிலைமை மாற வேண்டும்.அதனூடாக தமது வாழ்க்கை மேம்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

அவர்களின் இந்த எதிர்பார்ப்பை பிழை என்று சொல்ல முடியாது.நாளுக்கு நாள் விலைவாசிகள் ஏறிக்கொண்டே போகின்றன. அரசு இதையெல்லாம் பற்றி கவலைப்படுவதாக இல்லை.

பெற்றோல் வரிசையை இல்லாமல் செய்ததை மாத்திரம் வைத்துக்கொண்டு ஏதோ பொருளாதார பிரச்சினையை சீர்செய்துவிட்டதுபோல் மார்தட்டி வருகிறது.ஆனால்இமக்கள் இங்கு படும் துன்பத்தை சொல்ல வார்த்தை இல்லை.

உண்மையில் இஇந்தப் பிரச்சினைகள் எல்லாம் எப்போது தீர்க்கப்படுகிறதோ அப்போதுதான் மக்கள் உண்மையான சுதந்திரத்தை உணர்வார்கள்.அதுவரைக்கும் இந்த நாடு சுதந்திரம் அடைந்தும் சுதந்திரம் அல்லாத நாடாகவே மக்களால் பார்க்கப்படும்.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 76 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு, இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் மாண்புமிகு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கும், கௌரவ பிரதமர் தினேஷ் குணவர்தன அவர்களுக்கும், இலங்கை அரசு மற்றும் அதன் நேசமிகு குடிமக்களுக்கும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, இலங்கைக் குடியரசு மேலும் முன்னேற்றமும் செழிப்பும் பெற வேண்டும் என வாழ்த்துகிறேன்.

சவுதி அரேபிய தூதுவர்
காலித் ஹமூத் அல்-கஹ்தானி

சுதந்திர தின...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தமிழ் மொழி மூலமான தேசிய கீதத்துக்கு பேரினவாதிகளிடமிருந்து எதிர்ப்புகள் தெரிவிக்கப்படுகின்ற நிலையில் எதைப்பற்றியும் கவலைப்படாமல் தமிழ் மொழிமூல தேசிய கீதத்துக்கு ஜனாதிபதி துணிந்து அனுமதி வழங்கியமை சிறுபான்மை இன மக்களின் மனங்களை குளிரச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை,இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் உரை இடம்பெறாமை பலரையும் ஏமாற்றமடையச் செய்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும்,தாய்லாந்து பிரதமர் இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அழைக்கப்பட்டதால் அவரைக் கௌரவிக்கும் வகையில்,தாய்லாந்து மொழியில் அறிவிப்பு செய்யப்பட்டமையும் விசேட அமசமாகும்.

இந்த மூன்றும் இன்றைய சுதந்திர தின நிகழ்வின் வழமைக்கு மாறான அம்சமாகும்.

ஜனாதிபதி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வினவியபோது மொட்டு கட்சியின் பொது செயலாளர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் மொட்டு கட்சியின் சார்பில் வேட்பாளர் யாரென்று முடிவெடுக்கப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

HAJJ 2024
Hijri 1446
புனித ஹஜ்
40 வருட ஹஜ், உம்றா அனுபவமுள்ள அல்ஹாஜ் Dr.M.R.M.பாறூக் JP. அவர்களின் சேப்வே ட்ரவல்ஸ் இம்முறை எப்பொழுதும் போன்று தரமான சேவை வழங்கி ஹஜ்ஜுக்கு அழைத்துச்செல்கிறது.
கடந்த ஹஜ்ஜில் நாம் முஅல்லிம் NO-2 சாகீர் சிக்கந்தரில் மிகசிறப்பான வசதிகளுடன் எமது ஹாஜிகள் மிக சிறப்பாக தமது ஹஜ் கடமையை நிறைவேற்றினார்கள். இன்ஷா அல்லாஹ் இம்முறையும் இதே முஅல்லிம் NO-2 சாகீர் சிக்கந்தரில் பயணிக்க இருக்கிறோம்.
தங்கமிடவசதி மக்கா, மதினாவில் Star Class Hotel, மினாவில் B" - Category Tent
அஷ்ஷேக் தல்ஹா பாரி, மவ்லவி அஸீஸ் ஆகியோரின் நேரடி வழிகாட்டலில் குழு பயணிக்கும். ஏனைய சேவைகள் வழமை போல் மிகச்சிறப்பாக செய்யப்பட்டுள்ளது.
நியாய கட்டணத்தில் நிறைவாக ஹஜ்ஜை பூர்த்தி செய்ய காலம் தாழ்த்தாமல் அழையுங்கள்:
ALHAJ DR.M.R.M.FAROOK - JP.
0777660637 I 0112513227
IATA
அஷ்ஷேக் தல்ஹா பாரி - 0777516786
மவ்லவி அஸீஸ் - 0777922831
SAFEWAY
TRAVELS & TOURS (PVT) LTD.
191/20-1, Siebel Garden, High Level Road,Colombo-05.

கேள்வி : நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு உங்களிடம் இருக்கும் திட்டம் என்ன?

கேள்வி : நீங்கள் கசினோ வரி 540 கோடி ருபா செலுத்தவில்லை என்று குற்றச்சாட்டு உள்ளதே?

கேள்வி : இலங்கையின் டொலர் பிரச்சினைக்கு காராணம் இலங்கை வர்த்தகர்கள்

வெளிநாடுகளில் டொலரை பதுக்கி வைத்திருக்கின்றமை என்று அமைச்சர் விஜயதாச ராஜபக்ச கூறியுள்ளார்.நீங்களும் அந்த பட்டியலில் உள்ளீர்களா?

கேள்வி : நீங்கள் இரட்டை பிரஜா உரிமை உள்ளவரா ?

கேள்வி : இலங்கையில் நட்டமடைந்துகொண்டு செல்லும் அரச நிறுவனங்களை ஏன் நீங்கள் பொறுப்பேற்கவில்லை?

கேள்வி : நீங்கள் ஜனாதிபதியானால ஊழல்,மோசடி தொடர்பில் என்ன நடவடிக்கை எடுப்பீர்கள்?

கேள்வி : நீங்களும் ஐஆகு இன் பின்னால் செல்வீர்களா? அவர்களுடன் செய்துகொண்ட நிபந்தனைகளில் மாற்றம் செயவீர்களா?

கேள்வி : உங்களுக்கு எம்பி பதவி வழங்கும்போது நீங்கள் அப்போதைய ஜனாதிபதி கோத்தாவிடம் நிதி அமைச்சு கேட்டீர்கள் அல்லவை?

கேள்வி : நீங்கள் வரி செலுத்தவில்லை என்று குற்றச்சாட்டு உள்ளதே?

கேள்வி : நீங்கள் எம்பிகளுக்கான சலுகைகளை அனுபவிக்கிறீர்களா ?

நான் ஜனாதிபதியினால் ஊழல், மோசடியை முற்றாக ஒழிப்பேன். பூஜ்ய நிலைக்கு கொண்டு வருவேன். நூறு வீதம் இது நடக்கும்.

மொட்டு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார்?

இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கினார் மொட்டு கட்சியின் எம்பியான அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் என்று கூறப்படும் தமிக்க பெரேரா.அவரது முழுமையான பேட்டி கீழே...

கேள்வி : நீங்கள் மொட்டு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் என்று தீர்மானிக்கப்பட்டுவிட்டதா ?

பதில் : அதை நான் அங்கம் வகிக்கும் கட்சிதான் தீர்மானிக்கும்.கட்சிக்குள் 4 பேர் போட்டியிடுவதற்கு தயாராக உள்ளார்கள் என்று கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.அந்த நால்வரில் நானும் ஒருவர்.இவர்களில் யாரை வேட்பாளராகத் தெரிவு செய்வதென்று கட்சிதான் தீர்மானிக்கும்.

எமது கட்சி பெரிய கட்சியாக இருக்கின்றபோதிலும் இப்போது அது 30 வீத வாக்குகளைத்தான் கொண்டுள்ளது.இந்த விகிதத்தை மேலும் அதிகரிக்க வேண்டியுள்ளது,

மொட்டு கட்சி இரண்டாக உடைந்தால் நூறு வீதம் தோல்வியடைவோம்.அது உடையாமல் பார்க்க வேண்டியுள்ளது. அப்போதுதான் 30 வீதமாகவுள்ள வாக்குகளை 51 வீதமாக உயர்த்த முடியும்.

கேள்வி : நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு உங்களிடம் இருக்கும் திட்டம் என்ன?

பதில் : இந்த நாட்டை சரியான முறையில் அபிவிருத்தி செய்வதற்கான ஆசியாவிலேயே என்னிடம்தான் சரியான திட்டம் இருக்கிறது. கல்வியை அபிவிருத்தி செய்து சாதனை படைத்த எனக்கு விவசாயத்தை அபிவிருத்தி செய்வதும் டிஜிட்டலை அபிவிருத்தி செய்வதும் பெரிய வேலையல்ல.ஆகவே,என்னால் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும்.

கேள்வி : நீங்கள் கசினோ வரி 540 கோடி ருபா செலுத்தவில்லை என்று குற்றச்சாட்டு உள்ளதே?

பதில் : இல்லை.என்னிடம் கெசினோ எதுவுமே இல்லை. எனது உறவினர்கள்தான் அதை நடத்துகிறார்கள்.

இலங்கையில் உள்ள வரி செலுத்தும் கம்பனிகளில் 10 வீதம் என்னுடைய கம்பனிகள். வரி செலுத்துவதில் நான்தான் முதலிடம்..தனிப்பட்ட வரியாக இருந்தாலும் சரி,கம்பனி வரியாக இருந்தாலும் சரி.

கேள்வி : இலங்கையின் டொலர் பிரச்சினைக்கு காராணம் இலங்கை வர்த்தகர்கள் வெளிநாடுகளில் டொலரை பதுக்கி வைத்திருக்கின்றமை என்று அமைச்சர் விஜயதாச ராஜபக்ச கூறியுள்ளார். நீங்களும் அந்த பட்டியலில் உள்ளீர்களா?

பதில் : இல்லை.

வெளிநாடுகளில் நூறு டொலரை வைத்திருந்தால் அது திருட்டாகும்.அந்த திருட்டை நான் செய்யவில்லை.

எனக்கு வெளிநாடுகளில் நிறுவனங்கள் உள்ளன.இந்தோனேசியால் இரண்டு தொழில்சாலைகள்,தாய்லாந்தில் மூன்று தொழில்சாலைகள்,பங்களாதேஷில் இரண்டு தொழில்சாலைகள் உள்ளன.

அதேபோல்,இத்தாலியிலும் உள்ளன. அமெரிக்காவில் களஞ்சியசாலை உள்ளது. அங்கு கிடைக்கின்றன இலாபத்தை டொலராக மாற்றி இலங்கைக்குத்தான் கொண்டு வருகிறேன்.

கேள்வி : நீங்கள் இரட்டை பிரஜா உரிமை உள்ளவரா?

பதில் : என்னிடம் சுநுளுஜனுநுவே ீநுசுஆஜவு கூட இல்லை.என்னால் இவற்றைப் பெற முடியும்.ஆனால்,எனக்குத் தேவையில்லை.பிறந்த நாட்டை விட்டு ஏன் நான் வேறு நாட்டில் போய் வாழ வேண்டும்?

கேள்வி : இலங்கையில் நட்டமடைந்துகொண்டு செல்லும் அரச நிறுவனங்களை ஏன் நீங்கள் பொறுப்பேற்கவில்லை?

பதில் : அரச நிறுவனங்களை பொறுப்பேற்பதில்லை என்பது எனது கொள்கை.

கேள்வி : நீங்கள் ஜனாதிபதியானால ஊழல்,மோசடி தொடர்பில் என்ன நடவடிக்கை எடுப்பீர்கள்?

பதில் : அதை முற்றாக ஒழிப்பேன்.பூஜ்ய நிலைக்கு கொண்டு வருவேன். நூறு வீதம் இது நடக்கும்.

கேள்வி : நீங்களும் ஐஆகு இன் பின்னால் செல்வீர்களா? அவர்களுடன் செய்துகொண்ட நிபந்தனைகளில் மாற்றம் செயவீர்களா?

பதில் : விற்க வேண்டிய நிலையில் இருக்கும் நிறுவங்களை இலாபகரமாக மாற்றினால் நிபந்தனைகளை திருத்த முடியும்.

சிறிலங்கன் எயார் லைன் நிறுவனத்தைத் தவிர ஏனைய நட்டமடையும் நிறுவனங்களை இலாமடையச் செய்வதற்கான திட்டம் என்னிடம் உண்டு.

மக்கள் பசியோடு இருக்கும்போது குசினியோடு தொடர்புபட்ட எயவ வரியை நீக்கியே ஆக வேண்டும்.அவ்வாறு நீக்குவதாக இருந்தால் வேறு வருமான வழிகளை நாம் காண்பிக்க வேண்டும்.

கேள்வி : உங்களுக்கு எம்பி பதவி வழங்கும்போது நீங்கள் அப்போதைய ஜனாதிபதி கோத்தாவிடம் நிதி அமைச்சு கேட்டீர்கள் அல்லவை?

பதில் : இல்லை.அவர் எனக்கு அந்த அமைச்சை தருவதாக சொன்னார். நான்தான் வேண்டாம் என்று கூறினேன்.

கேள்வி : நீங்கள் வரி செலுத்தவில்லை என்று குற்றச்சாட்டு உள்ளதே?

பதில் : அது பொய்.வரி செலுத்தியமைக்கான உறுதிப்பத்திரத்தை நாடாளுமன்றத்துக்கு வழங்கிய ஒரேயொரு எம்பி நான் மட்டும்தான்.நீங்கள் நாடாளுமன்றத்தைத் தொடர்புகொண்டு இதுபற்றி விசாரிக்கலாம்.

கேள்வி : நீங்கள் எம்பிகளுக்கான சலுகைகளை அனுபவிக்கிறீர்களா ?

பதில் : இல்லை.எந்த சலுகைகளையும் பெறுவதில்லை.சம்பளம் பெறுவதுமில்லை. வாகனம் பெறுவதுமில்லை.-என்றார்.

புனித ஹஜ்

HAJJ 2024

ஹஜ்ஜுக்கான
புதிவுகள் ஆரம்பம்

36 வருட ஹஜ் உம்றா அனுபவத்துடன் இம்முறை புனித ஹஜ்ஜிற்காக அல்ஹாஜ் சையாப் அன்வர் அவர்களின் கண்காணிப்பில் ஹாஜிகளை அழைத்துச்செல்ல அனைத்து ஏற்பாடுகளையும் மிக சிறப்பாக செய்திருக்கிறது

சப்ரா ட்ரவல்ஸ் & டுவர்ஸ்.

அஸீஸியா செல்வதில்லை மக்காவில் தங்குவது

ஹஜ் பெகேஜில் அடங்குபவை

- மக்கா மதீனாவில் நட்சத்திர ஹோட்டலில் தங்குமிடவசதி
- மினாவில் B Category Tent, தரைமார்க்க போக்குவரத்து
- இலங்கை உணவு மற்றும் சிற்றுண்டி
- சரித்திர முக்கியத்துவமிக்க இடங்களை தரிசித்தல்
- விசா மற்றும் விமானப்பயண டிக்கட்
- அனுபவமுள்ள உலமாக்களின் வழிகாட்டல் என அத்தனையும் சிறப்பான சேவை.

**நீங்கள் எதிர்பாராத நியாய கட்டணம்,
நிறைவான சேவை**

எனவே காலம் தாழ்த்தாமல் உடன் பதிவுக்கு முந்துங்கள்!

அல்ஹாஜ் சையாப் அன்வர்
0775046995 I 0777667152
அல்ஹாஜ் ஜாபிர் - 0767007391

Safra Travels & Tours (Pvt) Ltd

FLG - 4, Dias Place, Gnasinghapura, Colombo -12.
Tel: (0094) 0112 335699 I Fax: 0112335043
E- mail: safra_travels@yahoo.com

BURAQUE TRAVELS

HAJJ PILGRIMAGE 2024

புனித ஹஜ்

47 ஆண்டுகால அனுபவமும், மூத்த உலமாவும் ஹாஜிகளுக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து ஹஜ் உம்றாவுக்கு வழிகாட்டும் அல்ஹாஜ் மவ்லவி ஏ.எல்.எம்.கலீல் மதனி அவர்களின் நேரடி வழிகாட்டலில் ஹஜ்பயணிக்கும் வாய்ப்பு

நாம் வழங்கும் சேவை

- மக்கா மதீனாவில் நட்சத்திர ஹோட்டலில் தங்குமிடவசதி
- தரைமார்க்க போக்குவரத்து
- இலங்கை உணவு மற்றும் சிற்றுண்டி
- சரித்திர முக்கியத்துவமிக்க இடங்களை தரிசித்தல்
- விமானப்பயண டிக்கட்
- அனுபவமுள்ள உலமாக்களின் வழிகாட்டல் என அத்தனையும் சொல்வதைப்போல் செய்யப்படும்.

As Sheikh M A M Masooth Ahmed (Hashimi) JP
077 9000 115
(Kattankudy)

As Sheikh M A Ibrahim (Gafoori)
077 42 39 389
(Colombo)

Al Haj Mishab JP
077 400 8485
(Negombo)

நியாய கட்டணம், நிறைவான சேவை, நேர்த்தியான வழிகாட்டல்

மேலதிக விபரங்களுக்கு:

+94 777 909 377 I +94 777 918 978

BURAQUE TRAVELS (PVT) LTD

☎ +94 11 267 8811
✉ Info@buraque.lk
62,Dematagoda Road,
Colombo -09 Sri Lanka

In Service
Over 3 Decades

IATA ACCREDITED AGENT

ஹஜ்

HAJJ 2024

வாழ்நாளில்
மறக்கமுடியாத பயணம்

Our Services

- Accommodation in Makkah (5 Star Hotel - Clock Tower)
  in Madinah (4 Star Hotel)
  in Mina Tent - B Category
- Sri Lankan Meals
- Luxury Ground Transport
- Visa with Insurance and Air Ticket
- Guidance By Ashsaik Suib Deeni

Luxury Package
Short Package

தரமான சேவையுடன்
அஷ்ஷேக் சுஐப் தீனி அவர்களின்
நேரடி வழிகாட்டலில்
புனித ஹஜ்ஜை பூரண திருப்தியுடன்
நிறைவேற்ற காலம் தாழ்த்தாமல் தொடர்புகொள்ளுங்கள்

For further details, contact:
Alhaj Askar Aunn - 0777 03 15 23
Alhaj Aunn - 077 55 42 660

The Global Travels & Leisure Pvt Ltd
ஹஜ் உம்றா சேவை நிறுவனம்
No.653, Maradana (Next to Sampath Bank) Colombo 10
Tel: 0117221876 I 0117221720 E-mail: askar@theglobal.lk

புனித ஹஜ் 2024

இம்முறை புனித ஹஜ்ஜிற்காக
ஹாஜிகளின் நலன் கருதி
3 பெகேஜ்களில் அழைத்துச்
செல்ல அனைத்து ஏற்பாடுகளையும்
மிக சிறப்பாக செய்திருக்கிறது.



PAKAGE -A: 20,95,000/-
முஅல்லிம் - B

PAKAGE -B: 16,95,000/-
முஅல்லிம் - C , Clock Tower

SORT PAKAGE -B: 18,95,000/-

நாம் வழங்கும் சேவை

- மக்கா மதீனாவில் நட்சத்திர ஹோட்டலில் தங்குமிடவசதி
- தரைமார்க்க போக்குவரத்து
- இலங்கை உணவு மற்றும் சிற்றுண்டி
- சரித்திர முக்கியத்துவமிக்க இடங்களை தரிசித்தல்
- விமானப்பயண டிக்கட்
- அனுபவமுள்ள உலமாக்களின் வழிகாட்டல் என அத்தனையும் சொல்வதைப்போல் செய்யப்படும்.

ரமழான்
இறுதி 15 நாட்கள்
உம்றா பெகேஜ்:
749,000/-

எனவே காலம் தாழ்த்தாமல் உடன் பதிவுக்கு முந்துங்கள்!

மேலதிக விபரங்களுக்கு:
அல்ஹாஜ் மௌலவி பைசல் பின்னூரி - **0777141151**
அல்ஹாஜ் மௌலவி ஸகரியா இனாமி - **0777151156**

பின்னூரியா

ஹஜ் உம்றா சேவை நிறுவனம்
BINNOORIYA HAJJ UMRAH SERVICE
#204/01, Grandpass Road,Colombo-14. and Asna Super Market, Akurana.

76வது சுதந்திர தின வாழ்த்துக்கள்...

“புதிய தேசம் அமைப்போம்”

பிரித்தானிய ஆட்சியின் கீழ் இருந்து 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றுக் கொண்ட இலங்கை தனது 76 ஆவது சுதந்திரத் தினத்தை இன்று (ஞாயிற்றுக்கிழமை) கொண்டாடுகிறது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் “புதிய தேசம் அமைப்போம்” என்ற தொனிப்பொருளில் இம்முறை சுதந்திர தினம் கொண்டாடப்படுகின்றது.

காலிமுகத்திடலில் கொண்டாடப்படவுள்ள 76 ஆவது சுதந்திர தினத்தில் முப்படையினரின் மரியாதை அணிவகுப்பு மற்றும் சாகச நிகழ்வுகள் உள்ளிட்ட நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

ஏனினும் சுதந்திர தின நிகழ்வில் ஜனாதிபாதியின் உரை இடம்பெறமாட்டாது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 7 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ஆரம்பமாகவுள்ள 5 ஆவது கூட்டத்தொடரில் ஜனாதிபதி கொள்ளை பிரகடன உரையை நிகழ்த்தவுள்ளதால் சுதந்திர தின நிகழ்வில் உரையாற்றமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினத்தில், பல இடர்பாடுகளுக்கு மத்தியிலும், வங்குரோத்து நிலையிலிருந்து விடுபட்டு, பொருளாதாரத்தை நிலையான நிலைக்கு கொண்டு வர முடிந்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மக்கள் துன்பங்களைச் சகித்துக்கொண்டு நாட்டை மீளக் கட்டியெழுப்பும் நீண்ட கால வேலைத்திட்டத்திற்கு ஆதரவளித்ததால் மெதுவாக முன்னேற முடிந்ததாகவும் ஜனாதிபதி தனது சுதந்திர தின வாழ்த்துச் செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

76வது சுதந்திர தின நல்வாழ்த்துக்கள்!

LIC
உங்கள் வாழ்க்கைக்கான உயிரோட்டம்

இல.29/2, ஷானெல் கட்டடம்,
விசாகா வீதி,கொழும்பு - 04.
தொலைபேசி : 0112-552277
www.liclanka.com

வெள்ளவத்தை, ரோயல் மருத்துவமனை நடத்தும்
குழந்தையின்மைக்கான
இலவச மருத்துவ ஆலோசனை முகாம்!

குழந்தையின்மை என்பது ஒரு குறைபாடு மட்டுமே!
அதிநவீன சிகிச்சைகள் மூலம் அதை நிறைவு செய்யலாம்!!
அது எப்படி என்பதை தெரிந்து கொள்ள வாருங்கள்!!!

54,000+ Healthy Babies Delivered Worldwide

43 years MEDICARE FOR WOMEN

இடம்:
ரோயல் மருத்துவமனை,
வெள்ளவத்தை

பெப்ரவரி 11 ஆம் திகதி, ஞாயிறு
8 am to 8 pm

சிறப்பு அழைப்பாளர்:
டொக்டர் கீதா ஹரிப்ரியா
தலைமை மருத்துவர், பிரசாந்த் கருத்தரிப்பு மையம்

- கருக்குழாய் அடைப்பு
- தொடர் கருச்சிதைவுகள்
- தொடர் IVF தோல்விகள்
- 40 வயதுக்கு மேல் கருத்தரித்தல்
- சினைப்பை கட்டிகள்
- எண்டோமெட்ரியோசிஸ்
- ஆண் மகப்பேற்றுக் குறைபாடுகள்

அனைத்துக்கும் அதிநவீன சிகிச்சைகள்

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: 0754000012

பிரசாந்த் மருத்துவமனை தகவல் மையம்
ரோயல் மருத்துவமனை, 62, W.A. சில்வா மாவத்தை,வெள்ளவத்தை
www.pfrcivf.lk | infopfrcsl@gmail.com

76வது சுதந்திர தின வாழ்த்துக்கள்...



இலங்கை சுதந்திரம் பெற்ற வரலாறு

கி.பி 1505 ஆம் ஆண்டில் போர்த்துக்கேயரினால் இலங்கையின் கரையோர பிரதேசம் கைப்பற்றப்பட்டது இதனைத்தொடர்ந்து கி.பி 1602 ஒல்லாந்தரின் ஏகாதிபத்தியத்துக்கு இலங்கையர்கள் அடிமைப்பட வேண்டி ஏற்பட்டதுடன், கி.பி 1766 ஆம் ஆண்டளவில் பிரித்தானியரின் ஆக்கிரமிப்பின் காரணமாக கந்த உடரட்ட சிங்களவர்கள் என்று அழைக்கப்படும் மலைநாட்டு சிங்கள மக்களைத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் வாழ்ந்த இலங்கை மக்களும் மீண்டும் அடிமை நிர்வாகத்திற்கு உட்பட வேண்டி ஏற்பட்டது.

கந்த உடரட்ட சிங்களவர்கள் என்று அழைக்கப்படும் மலைநாட்டு சிங்கள மக்களின் பிளவு அதிகார குழுக்களினால் 1815 ஆம் ஆண்டளவில் உடரட்ட என்ற மலையகப் பிரதேசத்தையும் எந்தவித சிரமமுமின்றி பிரிட்டன் தமது நிருவாகத்திற்கு உட்படுத்தியது. இதன் பின்னர் முழு இலங்கையும் ஆங்கிலேயரின் நிருவாகத்திற்குள் கொண்டுவரப்பட்டது.

இலங்கையர்களின் சுதந்திரப் போராட்டம் இங்கிருந்தே ஆரம்பமாகின்றது என்று கூறலாம். 1818 ஆம் ஆண்டு உடரட்ட என்ற மலையக பெருங்கலகம், 1823 ஆம் ஆண்டு கொஸ்வத்தை கிளர்ச்சி, 1826ஆம் ஆண்டு பிம்தென்னே கிளர்ச்சி, 1835 ஆம் ஆண்டு மல்வத்து விகாரையின் கிளர்ச்சி, 1848ஆம் ஆண்டு மாத்தளை பெருங்கிளர்ச்சி முதலான கிளர்ச்சிகள் ஆரம்பமானவை நாட்டு மக்கள் இழந்த சுதந்திரத்தை மீண்டும் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடனேயாகும். 1818 ஆம் ஆண்டு கிளர்ச்சியினால் சிறிய அளவில் அல்லது ஆங்கிலேயரின் நிர்வாகத்தில் அவர்களது கொடூரமான நிர்வாகத்தில் தளர்வை ஏற்படுத்தவேண்டி ஏற்பட்டது.

1831ஆம் ஆண்டில் அரசாங்க முறையில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் கோல்புறுக் ஆணைக்குழுவினர், முதல் முறையாக அவர்களது ஆட்சி முறையில் மறுசீரமைப்பு ஆலோசனையை சமர்ப்பித்தனர். பிரித்தானியர்களின் இந்த முயற்சி பெருமளவில் வெற்றியடையவில்லை.

1848 ஆம் ஆண்டு மாத்தளை பெருங்கிளர்ச்சி ஆரம்பமானதுடன் அது இலங்கை சுதந்திர போராட்டத்தின் இறுதி கிளர்ச்சியாக அமைந்தது. 1796ஆம் ஆண்டில் இலங்கையின் ஒரு பகுதி மாத்திரம் பிரிட்டனின் ஏகாதிபத்தியத்திற்கு அடிமைப்படுத்தப்பட்டு இருந்தது. அதன் பின்னர் 1815 ஆம் ஆண்டில் முழு நாடும் பிரிட்டனின் நிர்வாகத்திற்கு உட்பட்டிருந்த யுகம் 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி முடிவிற்கு வந்தது.

1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி இலங்கை மக்களுக்கு சுதந்திரம் கிடைத்தது. சுதந்திரம் கிடைத்த பின்னர் கடந்த 76 வருட காலப்பகுதியில் 1948 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு இரத்து செய்யப்பட்ட பின்னர் இரண்டு அரசியல் யாப்புகள் மூலம் நாடு முன்னெடுக்கப்பட்டது. இதில் முதலாவது 1972 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட மக்கள் குடியரசு யாப்பு ஆகும். அத்தோடு இரண்டாவது 1978 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட அரசியல் யாப்பு அமைப்பாகும்.

வரலாற்றின் ஆரம்பத்தில் இருந்து தாய்நாட்டின் இறைமைக்காக இரத்தம் சிந்தியமை மற்றும் உயிரை தியாகம் செய்தவர்களின் எண்ணிக்கை அளப்பரியதாகும்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் எமது தாய்நாட்டை கட்டுப்படுத்திய நாள் தொடக்கம் நாட்டு மக்கள் சுதந்திரத்திற்காக மேற்கொண்ட அளப்பரிய அர்ப்பணிப்பின் பெறுபேறே இன்று நாம் அனுபவிக்கும் சுதந்திரமாகும்.

அடிமைப்படுத்தப்பட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட ஏகாதிபத்திய எதிர்ப்பு கிளர்ச்சி மத்தியில் உயிரை தியாகம் செய்த பத்தாயிரம் பேரான தமிழ், சிங்கள, முஸ்லிம், பறங்கியர் போன்ற நாட்டு பற்றைக் கொண்ட அனைவரதும் அர்ப்பணிப்பையும் நாம் மறந்துவிட் முடியாது.

இதன் பெறுபேறாக எதிர்காலத்தில் பயன்களை பெறுவதற்கு இதற்கான பின்புலத்தை வகுப்பது தற்போதைய யுகத்தின் தேவையாகும்.

76வது சுதந்திர தின நல்வாழ்த்துக்கள்!
SARITA Textoriuum
Right Place for Right Choice
No. 99, Main Street, Colombo 11.
Tel : 2446023
Web : www.saritatex.com
www.facebook.com/saritatextorium

TROPIC OF LINEN
MEN'S | WOMEN'S
Enjoy a taste of island living
No.1 Wijerama Mawatha, Colombo 7 +94 112 672 972 info@tropicoflinen.com
www.facebook.com/TropicOfLinen www.tropicoflinen.com

MUNICIPAL PARK
& CHILDREN PARK

பாதுகாப்பற்ற சூழலில் சட்டவிரோத சிறுவர் பூங்கா

ரூ.2.5 மில்லியனை பொறுப்பேற்க யாருமில்லை

எம்.எல்.எஸ்.முஹம்மத்
lk.mlsmohamed@gmail.com

மகரகம அபேக்சா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிந்த தனது தாயை பார்த்து விட்டு தம்பி அமிலவுடன் வீடு நோக்கி நடந்து சென்றுகொண்டிருந்த சந்தமாலி பெரேரா கடந்த 2008.09.12 ஆம் திகதி இரவு 10 மணி அளவில் இரத்தினபுரி மாநகர சபை பூங்கா அருகில் குத்திக் கொலை செய்யப்பட்டார்.

இதன்போது பாரிய காயங்களுக்குள்ளான அவளின் தம்பி அமில இன்னும் முறையாக நடக்க முடியாமல் ஊன்று கோலின் உதவியுடன் நாட்களை நகர்த்தி வருகிறார்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட இரத்தினபுரி பொலிசார் இரத்தினபுரி நகர் மத்தியில் அமைந்துள்ள இரத்தினபுரி மாநகர சபைக்கு சொந்தமான கைவிடப்பட்ட சிறுவர் பூங்காவில் இரவு நேரங்களில் வந்து செல்லும் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையான இளைஞர்கள் சிலரே இந்தக் கொலையை செய்திருக்கின்றனர் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 2005 ஆம் ஆண்டு 2.5 மில்லியன் ரூபா செலவில் ஆரம்ப அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு பின்னர் பாதுகாப்பற்ற இடம்மென தெரியவந்ததால் கைவிடப்பட்டிருக்கும் இரத்தினபுரி மாநகர சபைக்கு சொந்தமான மேற்படி சிறுவர் பூங்காவை மையப்படுத்தி இடம்பெறும் சமூக விரோத செயல்கள் இன்னும் முற்றுப் பெறவில்லை.

தகவல் அறியும் சட்ட மூலத்திற்கிணங்க இரத்தினபுரி குற்றத் தடுப்பு பொலிஸாரின் அறிக்கையின் படி இதுவரை மேற்படி பாலடைந்த சிறுவர் பூங்காவை மையப்படுத்தி சில கொலை முயற்சிகளும் 5 துப்பாக்கிச் சூட்டு நிகழ்வுகளும் 57 பாலியல் வன்முறை நிகழ்வுகளும் நூற்றுக்கணக்கான சமூக விரோத குற்றங்களும் பதிவாகியுள்ளதாக அவ்வறிக்கை தெரிவிக்கிறது.

எல்லா இடங்களிலும் சிறார்களின் உடல் உள ஆரோக்கியத்தை முன்னிட்டு சிறுவர் பூங்காக்கள் நாடளாவிய ரீதியில் அமைக்கப்பட்டுள்ள போதிலும் இரத்தினபுரி நகரின் மத்தியில் களுகங்கை எல்லையாகக் கொண்டு அமைக்கப்பட்ட இச்சிறுவர் பூங்கா இன்று முற்றாக கைவிடப்பட்டு 18 நிறைவு பெற்றுள்ளன.

இரத்தினபுரி மாநகர சபையின் பொறுப்பற்ற நடவடிக்கையால் பாதுகாப்பற்ற இடத்தில் உருவாக்கப்பட்ட இச்சிறுவர் பூங்காவின் ஆரம்பக் கட்ட நிர்மாணப் பணிகளுக்கென அரசு 2.5 மில்லியன் ரூபாவை அநியாயமாக செலவு செய்துள்ளதாக தேசிய ஊடகச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

“எனினும் இதுவரை மேற்படி சிறுவர் பூங்காவிற்காக அநியாயமாக செலவிடப்பட்ட 2.5 மில்லியன் ரூபா நிதி தொடர்பில் உரிய விசாரணைகள் எதுவும் இடம்பெறவில்லை. யார் செலவழித்துள்ளனர்?எப்படி செலவழிக்கப்பட்டுள்ளன?இதற்கான அங்கீகாரம் எப்படி பெறப்பட்டுள்ளது? ஆகிய அனைத்தும் இன்றுவரை மர்மமாகவே உள்ளது.

இறுதியில் இரத்தினபுரி சிறுவர்களே பலிவாங்கப்பட்டுள்ளனர்.அவர்களுக்கான சிறுவர் பூங்காவை ஒழுங்காக அமைத்துக் கொடுக்க இரத்தினபுரி மாநகர சபை தவறியுள்ளது”, என இரத்தினபுரி மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ். பிள்ளை குற்றம் சுமத்துகிறார்.

இரத்தினபுரி சிறுவர் பூங்காவிற்கான அமைவிட திட்ட விளக்கப்படத்தின் படி இரத்தினபுரி பொதுச் சந்தை கட்டிடத்திலிருந்து சுமார் 500 மீட்டர் நீளமும் 25 முதல் 50 மீட்டர் வரை அகலமும் கொண்ட காணியிலேயே சிறுவர் பூங்கா அமைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும் இக்காணியின் வலது பக்க ஓரமாக களுகங்கை நீண்டு செல்வதால் அடிக்கடி மண்சரிவு அனர்த்தங்களையும் வெள்ள அனர்த்தங்களையும் இச்சிறுவர் பூங்கா எதிர்கொள்வதால் சிறுவர் பூங்கா அமைக்கும் திட்டம் இரத்தினபுரி மாநகர சபையால் கைவிடப்பட்டது என மேற்படி மாநகர சபையின் முன்னாள் எதிர்கட்சித் தலைவர் எஸ்.முனசிங்க தெரிவிக்கிறார்.

கடந்த 2005 ஆம் ஆண்டு பதவியிலிருந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் அப்போதைய சபரகமுவ மாகாண ஆளுநர் மகிபால ஹெரத்தின் அனுமதியுடன்தான் இந்த இடத்தில் இரத்தினபுரி மாநகர சிறுவர் பூங்காவை அமைப்பதற்கு சுமார் 2.5 மில்லியன் ரூபாவை இரத்தினபுரி மாநகர சபைக்கு வழங்கியது.

அரசாங்க அபிவிருத்தி செயற்திட்டங்களை முன்னெடுக்கும்போது அதற்குரிய நிபந்தனைகளும் ஒழுங்கு விதிமுறைகளும் பின்பற்றப்பட்டிருந்தால் இப்படியான அநியாயங்களும் நிதி துஷ்பிரயோகங்களும் இடம்பெற்றிருக்காது என சபரகமுவ மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் இப்லார் எம்.யஹ்யா தெரிவிக்கிறார்.

மேற்படி சிறுவர் பூங்கா அமைக்கப்படுவது தொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகார சபை ஏன் மறுப்புத் தெரிவித்தது? என சபரகமுவ மாகாண மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளரிடம் கேட்ட போது

”இலங்கையின் நீர் வளங்கள் தொடர்பான இலக்கம் 47ஃ1980 அரச வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க நதிகளின் இரு பக்கங்களிலும் 20 மீட்டர் நிலம் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கே உரித்தானது.

எனினும் இரத்தினபுரி நகர சபை மேற்படி சட்டங்கள் எதனையும் கருத்திற் கொள்ளாது சிறுவர் பூங்காவை களுகங்கையை அண்மித்து அமைக்க முயற்சித்தனர். இச்சந்தர்ப்பத்தில்தான் நாம் இதனை சட்டவிரோதமான செயற்பாடு என அறிவித்து இடை நிறுத்தினோம்”, என அவர் தெரிவிக்கிறார்.

(தொடரும்)

உலக விவகாரங்களை அணுகுவதில் முக்கிய பாத்திரமாக உருவெடுத்திருக்கும் சவூதி அரேபியா

இலங்கையுடனும் உறவுகளை பலப்படுத்தும் வகையில் 2023இல் பல முன்னெடுப்புகளும் மேற்கொள்ளப்பட்டன

(காலித் ரிஸ்வான்)

2023ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து அரசியல் சீரமைப்புகளை செய்து, கனிசமான உலகளாவிய உச்சிமாநாடுகள் மற்றும் அதி முக்கிய நிகழ்வுகளுக்கு தலைமை தாங்கி நடாத்தி வருவதிலிருந்து சவூதி அரேபியா உலக அரசியல் அரங்கில் ஒரு முக்கிய இராஜதந்திர கதாப்பாத்திரமாக உருவெடுத்துள்ளமை யாவரும் அறிந்ததே.

சர்வதேச இராஜதந்திர விவகாரங்களில் சவூதி அடைந்துள்ள இந்த குறிப்பிடத்தக்க உயர் நிலையானது சவூதியின் வளர்ந்து வரும் பூகோள அரசியல் செல்வாக்கிற்கு ஒரு சான்றாக இருப்பது மட்டுமல்லாது, அதன் வெளியுறவுக் கொள்கைகள் மற்றும் அணுகுமுறைகளில் புதியதொரு மறுமலர்ச்சியையும் அடையாளம் காட்டியுள்ளது.

கடந்த ஆண்டுகளில் தோன்றிய பிராந்திய மற்றும் சர்வதேச அரசியல், பொருளாதாரம் சார் மற்றும் இதர சிக்கல்களை சீர்செய்யும் நோக்கில் சவூதி அரேபியா அர்ப்பணிப்புடனும் வேகமாகவும் செயற்பட்டு வந்ததோடு, சர்வதேச நெருக்கடிகளை நிர்வகித்தல் மற்றும் பல்வேறு வகையான உலகளாவிய பிரச்சினைகளின் போது பல பேச்சுவார்த்தைகளை தொடங்கி நடாத்துவதிலும் அதன் ஆர்வத்தை வெளிப்படுத்தியமை அரசியலை ஆராயும் எவரும் மறுக்கமுடியாத நிதர்சன உண்மையாக இருக்கிறது.

போர் பிரதேசங்களில் சிக்குண்ட மக்களை அப்பிரதேசங்களிலிருந்து பாதுகாப்பாக மீட்பதில் இருந்து அம்மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதிலிருந்து முரண்பட்ட நாடுகளிடையே சமாதானப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வழிசெய்து அவற்றுக்கு தலைமை தாங்குவது போன்ற முன்மாதிரியான விடயங்களை சவூதி மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த செயற்பாடுகள் மூலம் முன்கூடிய ராஜதந்திரத் திட்டமிடல் மற்றும் அவற்றை சிறப்பாக கையாள்தல் போன்ற விவகாரங்களில் நாங்கள் திறமையானவர்கள் என்பதை அந்நாட்டு அரசியல் பாத்திரங்கள் எடுத்துக்காட்டியுள்ளனர்.

மாறிவரும் கூட்டணிகள் மற்றும் அதிகரித்து வரும் சர்வதேச அரசியல் சவால்களுடன் கூடிய சூழ்நிலையில், முக்கியமான பேச்சுவாரத்தைகளுக்கான அழைப்பாளராகவும் சர்வதேச மோதல்களைத் தீர்ப்பதில் மத்தியஸ்தராக செயற்பட்டதும் சவூதி அரேபியாவின் அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் சர்வதேசங்களுடனுமான தனது ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் அந்நாட்டின் அவாவையும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

இவ்வாறான குறிப்பிடத்தக்க இராஜதந்திர முயற்சிகளை வெற்றிகரமாக மேற்கொண்ட சவூதி அரேபிய இராச்சியம், சர்வதேச அரசியல் நிகழ்ச்சி நிரலை வடிவமைக்கும் ஒரு மையப்புள்ளியாக உருவெடுத்திருக்கிறது.

கடந்த 2023ம் ஆண்டு முழுவதும், சவூதி அரேபிய இராச்சியம் குறிப்பிடத்தக்க சர்வதேச உச்சிமாநாடுகளை நடத்தியது.

ஓகஸ்ட் மாதம், உக்ரேனிய நெருக்கடி பற்றிய கலந்துரையாடலுக்காக சுமார் 40 நாடுகளைச் சேர்ந்த தேசிய பாதுகாப்பு ஆலோசகர்களை வரவழைத்து ஜித்தா நகரில் ஒரு உச்சி மாநாட்டை நடாத்தியது.

வளைகுடா நாடுகளின் கூட்டுறவுக் கவுன்சில் (புஊஊ) மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு (யுளுநுயு) ஆகியன தங்கள் தொடக்க உச்சிமாநாட்டை அக்டோபர் மாதத்தில் சவூதியில் நடாத்தியது.

காசாவின் போர் நிலைமைக்கு தீர்வுகாணும் வகையில், இஸ்ரேலிய ஆக்கிரமிப்பை நிவர்த்தி செய்ய நவம்பர் மாதம் ரியாத் நகரில் ஒரு அரபு-இஸ்லாமிய உச்சி மாநாட்டைக் கூட்டியது.

இதைத் தொடர்ந்து சவூதி-ஆபிரிக்க உச்சிமாநாடு நடைபெற்றது, மேலும் கடந்த ஆண்டு இறுதிப் பகுதயில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் சவூதிக்கான விஜயத்தைத் தொடர்ந்து ஒரு முக்கிய சவுதி-ரஷ்ய உச்சிமாநாடு நடைபெற்றது.

சூடானில் சவூதி முன்னெடுத்த மீட்புப் பணி

சூடானில் உள்நாட்டு பிரச்சனைகளால் ஏற்பட்ட பதட்ட நிலையின் போது சவூதி அரேபிய தனது கடற்படையை பயன்படுத்தி மேற்கொண்ட மீட்புப்பணி உலகளவிலும் பாராட்டப்பட்டது.

சூடானிய ராணுவம் மற்றும் சுளுகு குழுவினருக்கிடையலான மோதலுக்கு மத்தியல் 184 சவூதி அரேபியர்கள் உட்பட 100 நாடுகளைச் சேர்ந்த 5,000க்கும் மேற்பட்டோர் அந்நாட்டிலிருந்து பாதுகாப்பாக மீட்கப்பட்டதாக சவூதி வெளியுறவு அமைச்சகம் அறிவித்தது.

இதில் 32 இலங்கையர்களும் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது. இது உலகளவில் மிக வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட மீட்பு நடவடிக்கைகளில் ஒன்றாக விவரிக்கப்பட்டது.

வளைகுடா மற்றும் மத்திய ஆசிய உச்சி மாநாடு

அரசியல் சார் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளும் நோக்கில், வளைகுடா நாடுகளின் கூட்டுறவுக் கவுன்சில் (புஊஊ) மற்றும் ஐந்து மத்திய ஆசிய நாடுகளின் (ஊ5) தலைவர்களை இணைத்து ஜூலை மாதம் ஜித்தா நகரில் சவூதி ஒரு உச்சிமாநாட்டை நடாத்தியது.

இவ்வுச்சிமாநாடு இரு தரப்பினரிடையே மூலோபாயங்களை வகுத்தல் மற்றும் அரசியல் சார் ஒத்துழைப்பை மேம்படுத்துதல் போன்றவற்றை வலியுருத்தும் வகையில் அமைந்ததோடு பாதுகாப்பு, பொருளாதார மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் கூட்டாண்மைகளை வளர்ப்பது போன்றவற்றையும் வலியுறுத்தும் வகையிலும் அமைந்தது.

ரஷ்ய உக்ரைன் மோதல் விவகாரம் குறித்த ஜித்தா சந்திப்பு

ஆகஸ்ட் மாதம், உக்ரைன் போர் விவகாரம் தொடர்பாக ஜித்தா நகரில் ஒரு அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. சவூதி அமைச்சரவையின் உறுப்பினரும் தேசிய பாதுகாப்பு ஆலோசகருமான டாக்டர் முஸயத் அல்-ஐபான் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் சுமார் 30 நாடுகளைச் சேர்ந்த தேசிய பாதுகாப்பு ஆலோசகர்களும் கலந்துகொண்டனர்.

வளைகுடா மற்றும் ஆசியான் உச்சிமாநாடு

16 வளைகுடா மற்றும் ஆசிய நாடுகளின் தலைவர்கள் வரலாற்றில் முதன் முறையாக ஒக்டோபர் மாதம் ரியாத் நகரில் சந்தித்தனர்.

2024-2028 ஆம் ஆண்டிற்கான ஒரு கூட்டு செயல் திட்டம், பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பு மற்றும் கூட்டாண்மையை மேம்படுத்துவதற்கும், இரு பிராந்தியங்களின் நலன்களுக்காகவும் தொடங்கி வைக்கப்பட்டது.

சவூதி-ஆபிரிக்க உச்சிமாநாடு

சவூதி அரேபியா தனது சுறுசுறுப்பான வெளியுறவுக் கொள்கையை மேம்படுத்தும் விதத்தில் , நவம்பர் மாதம் ரியாத் நகரில் சவூதி-ஆபிரிக்க உச்சிமாநாட்டை நடத்தியது.

இரு நாடுகளுக்கிடையிலுமான வளரச்சியில் ஒத்துழைப்பு மற்றும் கூட்டாண்மையை மேம்படுத்துதல் மற்றும் வளமான எதிர்காலத்தை நோக்காக கொண்டு இரு கண்டங்களுக்குமிடையிலான ஒருங்கிணைப்புக்கான அடித்தளங்களை அமைப்பதில் இரு தரப்பினரின் உறுதியுடனும் அவ்வுச்சிமாநாடு நிறைவடைந்தது.

சவுதி அரேபியாவின் பட்டத்து இளவரசரும் பிரதமருமான இளவரசர் முஹம்மத் பின் சல்மான், உச்சிமாநாட்டின் போது ஆப்பிரிக்காவில் மன்னர் சல்மான் மேம்பாட்டு முன்முயற்சித் திட்டத்தை நிறுவுவதாக அறிவித்தார்,

இது ஆபிரிக்க கண்டம் முழுவதும் பத்து ஆண்டுகளுக்குள் ஒரு பில்லியன் டொலர் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டமைக்கப்பட்டது.

அரபு-இஸ்லாமிய உச்சி மாநாடு

காஸா மீதான இஸ்ரேலிய ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து நிலைமையின் உக்கிரம் காரணமாக, நவம்பர் மாதம் ஒரு அரபு-இஸ்லாமிய உச்சிமாநாட்டிற்கு சவுதி அரேபியா அழைப்பு விடுத்தது.

ரியாத் நகரில் நடைபெற்ற இவ்வுச்சிமாநாட்டில் 57 க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்றதோடு, காசா மீதான இஸ்ரேலிய முற்றுகையை தகர்ப்பது, போரை நிறுத்துவது மற்றும் ஆக்கிரமிப்பை முடிவுக்கு கொண்டுவருவது உள்ளிட்ட முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

தொடர்ச்சி 05 ம் பக்கம் பார்க்க...

04 ம் பக்கத் தொடர்ச்சி...

சவுதி-கரீபியன் உச்சிமாநாடு

சவூதி அரேபியா கரீபியனினருடனான (ஊயுசுஐஊழுஆ) தனது முதல் உச்சிமாநாட்டை நவம்பர் மாதத்தில் நடாத்தியது. சவூதி விஷன் 2030 திட்டத்தோடு அமைந்த வகையில் பொருளாதாரம், முதலீடு, வர்த்தகம், எரிசக்தி, சுற்றுலா மற்றும் பிற துறைகளில் கூட்டாண்மைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டே இவ்வுச்சிமாநாடு நடைபெற்றது.

பரஸ்பர நலன்கள் மற்றும் நட்பு உறவுகளை முக்கித்துவப்படுத்தி, கல்வி, சுகாதாரம், கடல்சார் ஒத்துழைப்பு, தகவல் தொடர்பு, தளவாடங்கள், உணவுப் பாதுகாப்பு, மற்றும் சுற்றுலாப் பொருளாதாரம் உட்பட பல துறைகளில் கூட்டாண்மைகளை விரிவுபடுத்துவதற்கும் மேம்படுத்துவதற்குமான வழிகளை ஆராயும் முகமாக சவூதி-கரீபியன் கூட்டு அறிக்கையொன்றும் இம்மாநாட்டின் போது வெளியிடப்பட்டது.

சவூதி-ரஷ்ய உச்சி மாநாடு

2023 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் சவூதி அரேபியாவிற்கு இராஜதந்திர விஜயமொன்றை மேற்கொண்டு பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் சல்மானோடு பல கட்ட சந்திப்புகளை நடாத்தினர்.

இருதரப்புக்குமான பரஸ்பர நலன்கள் மற்றும் இரு நாடுகள், மத்திய கிழக்கு மற்றும் சர்வதேசம் தொடர்பான பிரச்சனைகள் குறித்து முக்கியமான கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

பாலஸ்தீனப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்த வேண்டியதன் அவசியத்தை இரு நாடுகளும் வலியுறுத்தியதோடு இரு நாடுகளின் நலன் கருதியும் எடுக்கப்படும் சர்வதேச தீர்மானங்களை நிறைவேற்றுவதன் மூலம் மட்டுமே பாலஸ்தீனத்தில் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை நிலைநாட்ட முடியும் என்று கருத்துத் தெரிவித்தனர்.

சவூதி–ரஷ்யா பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த இருதரப்பும் இணங்கியதோடு உலகளாவிய எண்ணெய் சந்தைகளை ஸ்திரப்படுத்த ழீநுஊ க்குள் இருக்கும் நெருக்கமான ஒத்துழைப்பைப் பாராட்டினர்.

சவூதி அரேபியா மற்றும் இலங்கைக்கு இடையிலான உறவு

சவூதி அரேபியா மற்றும் இலங்கைக்கு இடையிலான வரலாற்று ரீதியான உறவுகளையும் தாண்டி, பாரம்பரியமாக புலம்பெயர் தொழிலாளர்களின் நலன் மற்றும் ஹஜ் உம்ரா விவகாரங்களின் செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட இத்தகைய வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதாரம் சார் நலன்கள் ஆகியவற்றின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது.

விஷன் 2030 என்ற இலட்சிய திட்டத்துடன் சர்வதேச அரங்கில் முன்னணிப் பாத்திரத்தை சவூதி அரேபியா வகிக்கும் நிலையில், இலங்கையும் தற்போது சவூதியுடனான பன்முக உறவுகளை மேம்படுத்தி அரசியல் மற்றும் பொருளாதாரத் துறைகளில் உறவுகளைப் பலப்படுத்த அதிக கவனம் செலுத்தி வருகிறது.

இந்த நிலையில், சவூதி அரேபியாவில் இருந்து இலங்கைக்கான முதலாவது இருதரப்பு அமைச்சர்களின் விஜயமானது சவூதி அரேபிய வெளிவிவகார அமைச்சர் கௌரவ பைசல் பின் பர்ஹான் அவர்கள் இலங்கைக்கு மார்ச் 2022 இல் விஜயம் செய்ததில் இருந்து ஆரம்பமானது.

கடந்த மார்ச் 2022 முதல் ஜுன் 2023 இற்கு இடைப்பட்ட காலத்தில் இலங்கையில் இருந்து சவூதிக்கு 7 அமைச்சர்கள் விஜயம் செய்துள்ளனர். இதில் ஜனவரி 2023 இல் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் கௌரவ அலி சப்ரியின் விஜயமும் அடங்கும்.

இலங்கையின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் கௌரவ தாரக பாலசூரிய இலங்கைக்கும் சவூதி அரேபியாவுக்கும் இடையிலான கூட்டு ஆணைக்குழு கூட்டத்தின் முதலாவது அமர்வில் பங்கேற்பதற்காக 2023 மே மாதம் 21-22 ஆம் திகதிகளில் சவூதிக்குவிஜயம் செய்திருந்தார்.

இதன்போது இராஜாங்க அமைச்சர் அவர்கள் சவூதி அரேபிய வெளியுறவுத் துறையின் துணை அமைச்சரான கௌரவ வலீத் அல் கெரிஜியை சந்தித்து அரசியல் ஆலோசனைகளுக்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டார்.

அப்போதைய சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட் தலைமையில் சவூதி அரேபிய பாராளுமன்ற நட்புறவுக் குழுவை இலங்கை பாராளுமன்றம் நிறுவியமையும் குறிப்பிடத்தக்கது.

சவூதி அரேபியாவின் பொருளாதாரம் மற்றும் திட்டமிடல் அமைச்சர் கௌரவ பைசல் எப்.அலி இப்ராஹிம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கடந்த 2023 நவம்பர் 27 அன்று சந்தித்து கலந்துரையாடினார்.

இக்கலந்துரையாடலின் போது, ஆடை உட்பத்தி மற்றும் சுற்றுலா உட்பட பல்வேறு துறைகளில் இலங்கையுடனான பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவதில் சவூதி அரேபியாவின் தீவிர ஆர்வத்தை அமைச்சர் பைசல் எப்.அலி இப்ராஹிம் தெரிவித்தார்.

2023ஆம் ஆண்டு மே மாதம் இரு நாடுகளுக்கும் இடையிலான கூட்டு ஆணையத்தின் முதல் அமர்வு இடம்பெற்றது, இதன் போது பாதுகாப்பு ஒத்துழைப்பு உட்பட 20 வெவ்வேறு துறைகளின் கீழ் ஒத்துழைப்பை நிறுவுவதற்காக 63 விடயங்கள் அடையாளம் காணப்பட்டன.

இலங்கையும் சவூதி அரேபியாவும் இடையில் கடந்த 2022-23 க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் சில இருதரப்பு ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகியுள்ளன.

சவுதி அரேபியா மேம்மபாடுகளுக்கான சவூதி நிதியம் (ளுகுனு) மூலம் மென்-கடன் திட்டத்தின் கீழ் மேம்பாட்டுத் திட்டங்களுக்காக 455 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிட்டுள்ளது.

கடன்களை மறுசீரமைப்பதற்கான தளங்களில், பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து, இலங்கைக்கு உதவுவதில் சவூதி அரேபியா முன்னனி வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

2023 ஆம் ஆண்டில் 63000 இலங்கையர்களுக்கு சவூதியில் வேலை வாய்ப்புகளை வழங்கி சவூதி அரேபியா முன்னனி வகித்தது. ஒவ்வொரு ஆண்டும், 200,000 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வெளிநாடுகளில் வேலை செய்ய இலங்கையை விட்டும் வெளியேறுகிறார்கள்.

கடந்த ஆண்டில் நிலவிய நிதி நெருக்கடியிலிருந்து மீள நாட்டிற்கான அந்நியச் செலாவணியினை ஈட்டித் தந்த முக்கிய அடிப்படையாக இது இருந்தமை மறுக்க முடியாத உண்மையாகும்.

ஆகவே இலங்கை மற்றும் சவூதி அரேபியாவுக்கு இடையில் நிலவி வரும் இருக்கமான உறவானது மேலும் பல முன்னேற்றகரமான இருதரப்பு ஒப்பந்தங்கள் மற்றும் அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்த பரிய பலமாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுவதோடு இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீண்டு வருவதற்கான ஒரு சந்தர்ப்பமாகவும் அமையும்.

اللجنة السعودية السريلانكية
المشتركة بدورتها الأولى
The 1st Session Of The Saudi
Sri Lankan Joint Committee

சுதந்திர தின வாரத்தில் பிறக்கின்ற குழந்தைகளுக்கு இசுரு உதான பரிசு சான்றிதழ்கள்

ஒவ்வொரு ஆண்டும், சுதந்திர தினத்துடன் இணைந்ததாக மக்கள் வங்கியின் “சுதந்திரத்தின் உதயம்“ நிகழ்ச்சித் திட்டம் நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன்படி, 2024 பெப்ரவரி 04 ஆம் திகதி காலை 9.30 மணி முதல் மக்கள் வங்கியின் தலைவர் திரு. சுஜீவ ராஜபக்ஷ மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி,பொது முகாமையாளர் திரு. கிளைவ் பொன்சேகா ஆகியோர் முன்னிலையில் பொரளை காசல் வீதி மகளிர் வைத்தியசாலையிலும், பொரளை டி சொய்சா மகளிர் வைத்தியசாலையிலும் இதன் அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெறவுள்ளது.

மக்கள் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் (தனிநபர் வங்கிச்சேவை) திரு. நளின் பத்திரனகே அவர்கள் இது தொடர்பில் கருத்துத் தெரிவித்தார்.

தாய்நாட்டின் குழந்தைகளுக்கு சிறந்த எதிர்காலத்திற்கான பாதையை உருவாக்குவதற்கு தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயற்படும் மக்கள் வங்கி, பெப்ரவரி 4 ஆம் திகதி சுதந்திர தினத்தின் கருப்பொருளாக “சுதந்திரத்தின் உதயம்“ என்ற நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தயார் செய்துள்ளது. என்றார்.

Zoho இலங்கையில் 30% வளர்ச்சி

இந்தியாவில் நிறுவப்பட்ட முன்னணி சர்வதேச தொழில்நுட்ப நிறுவனமான Zoho Corporation, உலகளாவிய ரீதியில் 100 மில்லியன் வாடிக்கையாளர்களுக்கு தனது 55க்கும் அதிகமான வியாபார அப்ளிகேஷன்களினூடாக சேவைகளை வழங்குவதாக அறிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டில் இலங்கை சந்தையில் 30மூ வருமான வளர்ச்சியை பதிவு செய்திருந்தது. Zoho Workplace, உற்பத்தித்திறனுக்கான ஒன்றிணைக்கப்பட்ட தொகுதிக்கட்டமைபு, Zoho CRM, வாடிக்கையாளர் முகாமைத்துவ தீர்வு மற்றும் ஆட்சேர்ப்பு கட்டமைப்பான Zoho Recruit போன்றவற்றுக்கான உறுதியான கேள்வி வளர்ச்சியுடன் உள்நாட்டு சந்தையில் சீரான முன்னேற்றத்தை பதிவு செய்துள்ளது.

உலகளாவிய ரீதியில் 100 மில்லியன் பாவனையாளர்கள் எனும் மைல்கல் இலக்கை எய்திய முதலாவது bootstrapped SaaS நிறுவனமாக Zoho திகழ்வதுடன், கடந்த ஆண்டில் நிறுவனம் 1 பில்லியன் வருடாந்த வருமானத்தை கடந்த வருடம் பதிவு செய்திருந்தது.

உள்நாட்டு வாடிக்கையாளர்களுக்கான தனது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வகையில், Zoho இன் பாவனையாளர் மாநாடு ‘ஞுழாழடைஉள’ இலங்கையில் முதன் முறையாக 2024 ஜனவரி 23 ஆம் திகதி கொழும்பு சங்கிரி-லா ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் கைகோர்ப்பு முதல் மனித வளங்கள் மற்றும் வடிவமைப்பாளர் சாதனங்கள் வரை தீர்வுகளை உள்வாங்கி நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

LV Power Panel உற்பத்தியை முன்னெடுக்கும் DIMO Energy

இலங்கையில் முன்னணியில் உள்ள பல்வகைத்துறை கூட்டுநிறுவனமான DIMO நிறுவனத்தின் வலுசக்தி பிரிவான DIMO Energy, அதன் ஏழு தசாப்தங்களுக்கும் மேலான நீண்ட கால பங்காளியான ளுநைஅநளெ உடன் இணைந்து, உள்நாட்டுக்குள்ளும், ஏற்றுமதி சந்தைகளுக்குமான SIEMENS SIVACON S8, SIEPAN 8PU Low Voltage (LV) Power Distribution Boards மற்றும் Motor Controட Centres (MCC) தயாரிப்புகளை உற்பத்தி செய்ய கைகோர்த்துள்ளது.

DIMO நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரும், மின்சக்தி மற்றும் வலுசக்திப் பிரிவிற்குப் பொறுப்பானவருமான விஜித் புஷ்பவெல இது பற்றி கருத்து தெரிவிக்கையில், ”இலங்கையிலும் உலக சந்தையிலும் Low Voltage Power Distribution Boards இற்கான அதிக கேள்வியே, DIMO Energy நிறுவனம் Panel உற்பத்தித் துறையில் நுழைவதற்கு காரணமாக அமைந்துள்ளது.

உட்கட்டமைப்பு மேம்பாடு, வலுசக்திக்கான கேள்வி அதிகரிப்பு மற்றும் உள்நாட்டில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை ஊக்குவித்தல் போன்ற அரசாங்க முயற்சிகளை தேசிய ரீதியில் ஈடுசெய்வதை DIMO Energy நிறுவனம் எதிர்பார்க்கிறது.

அத்துடன், சர்வதேச அளவில் வளர்ந்து வரும் சந்தைகளுக்குள் நுழைவதையும், உலகளாவிய வலுசக்தி மாற்றத்தில் பங்கேற்பதையும், மேம்பட்ட வலுசக்தி மற்றும் வலுசக்தித் தீர்வுகளை ஏற்றுமதி செய்வதையும் DIMO Energy நோக்கமாகக் கொண்டுள்ளது.” என்றார்.

பராக்காவுக்கு சிறந்த வெற்றியாளருக்கான இடம்

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் நடத்தப்பட்ட 25ஆவது ஜனாதிபதி ஏற்றுமதி விருது வழங்கல் நிகழ்வில், மூலிகை மற்றும் ஆயுர்வேத பிரிவில் சிறந்த ஏற்றுமதியாளர் விருதை வெற்றிகொண்டதன் மூலமாக, கருஞ்சீரக எண்ணெய் உற்பத்தி மற்றும் மூலிகைப் பொருட்கள் உற்பத்தியில் முன்னணியில் இருக்கும் பராக்கா நிறுவனத்திற்கு மேலுமொரு குறிப்பிடத்தக்க அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இவ்விருது இரண்டு வகையில் சிறப்பு மிக்கது. இதுவரை உயர்தர மூலிகை மற்றும் ஆயுர்வேத தயாரிப்புகளை ஏற்றுமதி செய்வதில் பராக்காவின் அர்ப்பணிப்பைக் கொண்டாடுகின்ற அதேவேளை, பராக்காவின் மதிப்புமிக்க மூலிகைசார் சுகாதாரப் பொருட்களை விநியோகம் செய்யும் பயோ எக்ஸ்ட்ராக்ஸ் (Bio Extracts) நிறுவனத்தின் 30வது ஆண்டு நிறைவையும் கொண்டாடுகிறது.

1993 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பயோ எக்ஸ்ட்ராக்ட்ஸ் நிறுவனம் உலகளாவிய ரீதியில் 54 ற்கும் மேற்பட்ட நாடுகளில் தன் எல்லையை விஸ்தரித்துள்ளது.

சர்வதேச அளவில் தொழில்சார் வெற்றியைத் தக்கவைத்துக்கொள்வதில் பயோ எக்ஸ்ட்ராக்ட்ஸின் உழைப்பையும், சவால்களைக் கடந்து முன்னேறிய முயற்சிகளையும் இந்த விருது கௌரவிக்கின்றது.

இந்தச் சிறந்த செயற்பாட்டிற்காக ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகள், ஊேநு ஏற்றுமதி விருதுகள் மற்றும் CNCI தொழிற்துறைசார் உயரிய பெறுபேற்று விருதுகள் (Industrial Excellence) போன்ற பல்வேறு விருதுகளைப் பலமுறை பராக்கா நிறுவனம் வெற்றிகொண்டு தனக்கான அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.

செலான் வங்கிக்கு NSA விருதுகள்

Sri Lanka Institute of Marketing (SLIM) அண்மையில் ஏற்பாடு செய்திருந்த தேசிய விற்பனை காங்கிரஸ் விருதுகள் (NSA) 2023இல் தனது குழுவின் வெற்றியை அறிவிப்பதில் செலான் வங்கி பெருமகிழ்ச்சியடைகிறது.

சிறந்த விற்பனைக் கலாச்சாரத்தை வளர்ப்பதில் வங்கியின் அர்ப்பணிப்பு ஆனது செலான் வங்கியை மீண்டும் முன் நகர்த்தி இந்த மதிப்புமிக்க நிகழ்வில் அதிக விருதுகளைப் பெற்ற வங்கியாக மாற்றியுள்ளது.

அர்ப்பணிப்பு மற்றும் சிறந்த செயற்திறனுக்கு சான்றாக செலான் வங்கிக் குழு உறுப்பினர்கள் NSA 2023இல் ஏழு உயர்மட்ட விருதுகளை வென்றனர்.

அவர்களின் குறிப்பிடத்தக்க பங்களிப்பு விருது பெறுபவரின் தனிப்பட்ட திறமையை வெளிப்படுத்துவது மட்டுமன்றி செலான் வங்கியின் விற்பனைக் குழுவின் கூட்டு வலிமையை பிரதிபலிப்பதோடு தொழில்துறையில் வங்கியின் முன்னணி நிலையை உறுதிப்படுத்துகிறது.

DFCC Pinnacle
JUNIOR
EXCLUSIVE BANKING SOLUTIONS FOR YOUR
LITTLE VIP

DFCC வங்கியின் Pinnacle Junior அறிமுகம்

DFCC வங்கி தனது செல்வந்த வாடிக்கையாளர்களுக்காக பிரத்தியேகமாக அறிமுகப்படுத்திய வங்கிச்சேவை முன்மொழிவான DFCC Pinnacle, தற்போது DFCC Pinnacle Junior ஐ அறிமுகப்படுத்தி அதனை மேலும் விரிவுபடுத்தியுள்ளது.

Pinnacle வாடிக்கையாளர்களின் பிள்ளைகளுக்காக பிரத்தியேகமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இப்புத்தாக்கம்மிக்க வங்கிச்சேவை முன்மொழிவானது இளம் சேமிப்பாளர்களுக்கு தங்குதடையற்ற நிதியியல் பயணத்தை உறுதிசெய்து, வியப்பூட்டும் மற்றும் பிரத்தியேகமான சலுகைகளுக்கு உத்தரவாதமளிக்கின்றது.

DFCC வங்கியின் உப தலைவரும், Pinnacle/கிளை வங்கிச்சேவை திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தலுக்கான தலைமை அதிகாரியுமான ஷேரா ஹசன் அவர்கள் இதன் மூலமாகக் கிடைக்கும் வாய்ப்புக்கள் குறித்து கருத்து வெளியிடுகையில், “DFCC Pinnacle Junior ஐ நாம் அறிமுகப்படுத்துகின்ற இத்தருணமானது, முன்னரை விடவும் மேம்பட்ட வகையில் நிகரற்ற வங்கிச்சேவை அனுபவங்களை வழங்கவேண்டும் என்ற எமது அர்ப்பணிப்பை உரத்து எடுத்துச் சொல்வதாக அமைந்துள்ளது.

இப்பிரத்தியேகத் திட்டமானது வங்கிச்சேவை என்பதற்கும் அப்பால், அடுத்த தலைமுறையின் நிதியியல் கனவுகள் மற்றும் அபிலாஷைகளை வளர்ப்பதற்கு நம்பிக்கையூட்டுகின்றது.

DFCC Pinnacle Junior என்பது சிறுவர்களின் எதிர்காலத்திற்கான ஒரு முதலீடாகக் காணப்படுவதுடன், இளம் தலைமுறையினருக்கு மகத்தான வங்கிச்சேவையை வழங்கி, புதிய வாய்ப்புக்களைத் தோற்றுவிப்பதில் DFCC வங்கியின் ஓயாத அர்ப்பணிப்பிற்கு சான்று பகருகின்றது,” என்று குறிப்பிட்டார்.

கடந்த நிதியாண்டின் 3ஆம் காலாண்டு முடிவுகளைவெளியிட்ட Adani Power

அதானி கூட்டு நிறுவனங்களின் ஒரு பகுதியான Adani Power Ltd. (APL) ஆனது, 2023 டிசம்பர்31 இல் முடிவடைந்த அதன் நிதியாண்டின் 3ஆவது காலாண்டிற்கான முடிவுகளைஅண்மையில் அறிவித்துள்ளது.

இந்த காலாண்டு முடிவுகள் தொடர்பில் Adani Power Ltd. பிரதம நிறைவேற்று அதிகாரி (CEO)S.B Khyalia கருத்து வெளியிடுகையில், &quot;2023-2024 நிதியாண்டின் மூன்றாம் காலாண்டின்நிதிநிலை முடிவுகளின் அடிப்படையில், எப்போதும் உயர்ந்த தரத்தை எட்டுவதன் மூலம், AdaniPower காணப்படுகின்ற துறைகள் முழுவதும் தனது தலைமைத்துவத்தை தொடர்ச்சியாக நிரூபித்து வருகிறது.

நிறுவனத்தின் மூலோபாய ரீதியாக அமைந்துள்ள மின்சார உற்பத்தி நிலையங்கள் மற்றும் PPA கள் மற்றும் வணிகத் திறன்களுக்கு இடையேயான உரிய திறன்ஒதுக்கீடு, எரிபொருள் முகாமைத்துவம் மற்றும் தளவாடங்களில் (logistics) அதன் வலிமைமற்றும் மின்னுற்பத்தி நிலைய O&amp;M இல் சிறந்து விளங்குவது ஆகியன, வளர்ந்து வரும்மின்சார தேவையை நிவர்த்தி செய்து வலுவான இலாபத்தை உருவாக்க உதவியுள்ளது.

மேம்படுத்தப்பட்ட பணப் புழக்கத்திற்கு உட்படுத்தலுக்கு அமைய, இது நிறுவனத்தின் கடனைக் குறைக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மஹானில் இடம்பெற்று வரும் Brownfieldதிறன் விரிவாக்கம் 1,600 ஆறு மின்னுற்பத்தி திட்டமானது, தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

அமானாவின் வெலிசற சுய வங்கிச் சேவை நிலையம் அறிமுகம்

நாடு முழுவதிலும் சமூகத்தாருக்கு இலகுவில் அணுகக்கூடிய மற்றும் சௌகரியமான வங்கிச் சேவைகளை ஏற்படுத்திக் கொடுக்கும் அமானா வங்கியின் நோக்கத்துக்கமைவாக, வெலிசர பகுதியில் தனது புதிய சுய வங்கிச் சேவை நிலையத்தை அங்குரார்ப்பணம் செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

வெலிசர பகுதியில் அமைந்துள்ள Phoenix காட்சியறை வளாகத்தில் இந்த சுய வங்கிச் சேவை நிலையம் நிறுவப்பட்டுள்ளதுடன், இது அமானா வங்கியின் 59 ஆவது வாடிக்கையாளர் பிரசன்ன அமைவிடமாகவும் அமைந்துள்ளது.

அமானா வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி இம்தியாஸ் இக்பால், வியாபார வங்கியியல் உப தலைவர் இர்ஷாத் இக்பால், கூட்டாண்மை வங்கியியல் உதவி உப தலைவர் ராஜேந்திர ஜயசிங்க, Phoenix பிரதம செயற்பாட்டு அதிகாரி புதித லேகம்ஆரச்சி மற்றும் வங்கியினதும் Phoenix இனதும் ஊழியர்களின் பிரசன்னத்தில் சுய வங்கிச் சேவை நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

வெலிசர சுய வங்கிச் சேவை நிலையத்தினூடாக எவ்வேளையிலும் பணத்தை மீளப் பெறுவது, வைப்புச் செய்வது மற்றும் காசோலை வைப்பு போன்ற வசதிகள் வழங்கப்படும்.

சன்ஷைன் ஹோல்டிங்ஸின் புதிய நிறைவேற்று அதிகாரி

பன்முகப்படுத்தப்பட்ட கூட்டு நிறுவனமான சன்ஷைன் ஹோல்டிங்ஸ் பிஎல்சி (CSE: SUN) ஜனவரி 18ஆம் திகதி நடைபெற்ற அதன் நிர்வாகக் கூட்டத்தில் குழுமத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரியாக ஷியாம் சதாசிவத்தை நியமிப்பதாக அறிவித்தது.

ஷியாம், துணை நிறுவனங்களான Sunshine Healthcare Lanka Limited மற்றும் Sunshine Consumer Lanka Limited ஆகியவற்றின் முகாமைத்துவப் பணிப்பாளராக பதவி வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

ஷியாம் 21 ஆண்டுகளுக்கும் மேலான கார்ப்பரேட் அனுபவத்தைக் கொண்டுள்ளார், உள்ளூர் வணிகத் தலைமை, நிறைவேற்று முகாமைத்துவ திறன்கள் மற்றும் சுகாதார மற்றும் நுகர்வோர் துறைகளில் விரிவான நிபுணத்துவத்தையும் கொண்டுள்ளார்.

ஷியாம் இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் (CCC) குழு உறுப்பினரும், இலங்கை மருந்துத் தொழிற்துறை சங்கத்தின் (SLCPI) முன்னாள் தலைவருமாவார்.

ஷியாம் தனது தொழிலை UK, Arthur Andersen நிறுவனத்தில் கார்ப்பரேட் ஃபைனான்ஸ் நிறுவனத்தில் தொடங்கினார், முதன்மையாக நடுத்தர நிறுவனங்களுக்கான மூலதனத்தை திரட்டுவதில் கவனம் செலுத்தினார்.

TULUX
Diesel Engine Oil
SINOPEC
T700
T500

யாழில் மூலோபாய விரிவாக்கத்தை அறிவித்துள்ள Interocean Lubricants

சினோபெக் நிறுவனத்திற்கான, இலங்கை, மாலைதீவு, இந்தியா ஆகிய நாடுகளுக்கான இலங்கையின் பிரத்தியேக விநியோகஸ்தரும் மசகு (lubricant) தயாரிப்புகளில் உலகளாவிய முன்னணி நிறுவனமுமான Interocean Lubricants (Pvt) Ltd., யாழ்ப்பாணத்தில் தனது விநியோக வலையமைப்பு விரிவாக்கத்தை உத்தியோகபூர்வமாக ஏற்படுத்தியுள்ளதாக பெருமையுடன் அறிவித்துள்ளது.

இலங்கையின் வடக்குப் பகுதிக்கு உயர்தர மசகு எண்ணெய் தீர்வுகளை வழங்குவதற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பில் குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கும் வகையில் இடம்பெற்ற இந்த முக்கியமான நிகழ்வு, பிரபல North Gate ஹோட்டலில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், Sinopec Fuel Oil Lanka (Pvt) Ltd நிறுவனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் Arthur Cheng Anxiang, Sinopec Energy Lanka (Pvt) Ltd. நிறுவனத்தின் வர்த்தக மேற்பார்வையாளர் Scott Shi, Interocean Lubricants (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஜயசாந்த தொட்டஹேவகே, பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர் தனபாலசிங்கம் ஜெயசீலன், யாழ்ப்பாண பொலிஸ் தலைமையக பரிசோதகர் சம்லி பலிஹேன, யாழ். பொலிஸ் போக்குவரத்து பொறுப்பதிகாரி சுரங்க பிரேமரத்ன உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

IIHSஇன் புதிய பாடநெறிகள்அறிமுகம்



தெற்காசிய பிராந்தியத்தின் சுகாதாரக் கல்வியின் முன்னோடியான International Institute of Health Sciences (IIHS) தாதியர் சேவை உள்ளிட்ட பல்வேறு துறைகளுடன் தொடர்புடைய ஏராளமான பாடநெறிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

அதன் பிரகாரம், Nursing, Biomedical Science, Physiotherapy, Health Administration, Digital Health, Radiography, Optometry, Pharmacy, Nutrition and Health, Sports and Exercise Science, Paramedic science, Psychology, Education போன்ற பல்வேறு துறைகளுக்குரிய சான்றிதழ் பாடநெறி, உயர் சான்றிதழ் பாடநெறி, டிப்ளோமா, பட்டப்படிப்பு, பட்டப்பின் படிப்பு மற்றும் முதுமானி பட்டப்படிப்பு ஆகியவற்றை IIHS நிறுவனம் வழங்குகின்றது.

உயர் தரப் பரீட்சைக்கு எந்த பிரிவில் தோற்றி இருந்தாலும் மேற்படி பாடநெறிகளை கற்க முடியுமென்பதோடு, சாதாரணத் தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கும் அடிப்படை பாடநெறியை பூர்த்தி செய்து மேற்படி பாடநெறிகளை கற்க முடிகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி பாடநெறிகளின் பெறுமதியில் 15 இல் ஒரு மடங்கை விட குறைவான கட்டணத்தில் IIHS நிறுவனத்தினூடாக மேற்படி பாடநெறிகளை கற்க முடியும்.

ஐக்கிய இராச்சியத்தின் (Coventry) கொவென்ட்ரீ பல்கலைக்கழகத்துடனான ஒப்பந்தத்தின் பிரகாரம் மேற்படி பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஜனசக்தியின் சிறுவர் சித்திரப்போட்டி

3-5 மற்றும் 6-10 வயதுக்குட்பட்ட பிள்ளைகளின் ஓவியத் திறனை வெளிப்படுத்தும் வகையில், அவர்களிடையே படைப்பாற்றலை வளர்க்கும் நோக்கில், ஜனசக்தி லைஃப் மேற்கொண்ட முயற்சியான சமீபத்தில் முடிவடைந்த ‘சுதந்திர சிந்தனைகள்’ ஓவியப் போட்டி மற்றும் கண்காட்சி, மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளது.

இந்த நிகழ்வானது நாடு முழுவதிலும் இருந்து 10,000 விண்ணப்பங்களைப் பெற்றிருந்தது. நாடு முழுவதும் உள்ள பாடசாலைகள் மற்றும் முன்பள்ளிகளை இலக்காகக் கொண்டு பரவலான பங்கேற்பை உறுதி செய்வதற்காக பிராந்திய செயற்பாடுகள் மூலம் சேகரிக்கப்பட்ட ஓவியப் படைப்புகளின் கண்காட்சி மற்றும் விருது வழங்கும் விழா நவம்பர் 18ஆம் திகதி கொழும்பு BMICH இல் இடம்பெற்றது.

இது எமது இளம் கலைஞர்களின் பல்வகையான திறமைகளை பிரதிபலிக்கும் கலைப்படைப்புகளின் மாபெரும் வரிசையை காட்சிக்கு வைத்தது.

கலாபதி, கலாபூஷண புலஸ்தி எதிரிவீர, செல்வி பிரசாதனி குமாரி மற்றும் திரு. பிரதீத் ரத்நாயக்க உள்ளிட்ட இலங்கையின் கட்புல கலைத் துறையில் புகழ்பெற்ற நடுவர்கள் குழு ஒவ்வொரு விண்ணப்பத்தையும் உன்னிப்பாக மதிப்பீடு செய்தது.

அதைத் தொடர்ந்து, ஒவ்வொரு பிரிவிலிருந்தும் சிறந்த 100 கலைப் படைப்புகள் தேர்வுசெய்யப்பட்டு BMICH கண்காட்சிக் கூடத்தின் பிரதான அரங்கில் காட்சிப்படுத்தப்பட்டன. இதன் மூலம் நமது நாட்டின் சிறார்களின் திறமையை பொதுமக்கள் கண்டுகளித்தனர்.

வெற்றியாளர்களின் அறிவிப்புடன் போட்டியின் சிறப்பம்சம் வெளிப்பட்டது. அவர்களின் சிறந்த சாதனைகளை அங்கீகரித்து, ஒவ்வொரு பிரிவிலும் 1, 2 மற்றும் 3வது இடங்களை வென்றவர்களுக்கு கணிசமான ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன. இரண்டு வயதுப் பிரிவுகளிலிருந்தும் முதல் 10 பங்கேற்பாளர்களுக்கு ரொக்கப் பரிசுகளும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தொடரும் “நெவத அவிதிமு” திட்டம்

இலங்கையின் முதலாவது மெழுகினால் தயாரிக்கப்பட்ட “சூரியா” வர்த்தக நாம தீக்குச்சிகள் உற்பத்தியாளரும், ஊதுபத்திகள், மெழுகுவர்த்திகள் மற்றும் தூய்மைப்படுத்த பயன்படுத்தப்படும் பொருட்கள் உற்பத்தியாளரும், சந்தை முன்னோடியுமான சன் மெட்ச் கம்பனி, தனது ஸ்தாபகர் மறைந்த திரு. ரி.ஆர். ஆர். ராஜன் அவர்களின் 21ஆம் நினைவு தினத்தை அண்மையில் அனுஷ்டித்திருந்தது.

அதனை முன்னிட்டு, இரு தசாப்த காலமாக நிறுவனம் முன்னெடுத்து வரும் கூட்டாண்மை சமூக பொறுப்புச் செயற்பாடான “நெவத அவிதிமு” (மீண்டும் நடமாடுவோம்) எனும் திட்டத்தை இம்முறையும் தொடர்ந்திருந்தது.

“நெவத அவிதிமு” (மீண்டும் நடமாடுவோம்) திட்டம், குறைந்த வசதிகள் படைத்த அவயவங்களை இழந்தவர்களுக்கு செயற்கை அவயவங்களை பெற்றுக் கொடுப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்டதாகும்.

இதனூடாக இந்த நபர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றப்படுவது மாத்திரமன்றி, இந்த உதவியைப் பெறுவோருக்கு வாழ்விலும், சமூகத்திலும் தமது முழு ஆற்றலையும் வெளிப்படுத்தக்கூடிய நிலைக்கு கொண்டு வருவதற்கான கல்வியையும் விழிப்புணர்வையும் வழங்குகின்றது.

இந்த நிகழ்வில் வர்த்தக நாம தூதுவர் யஷோதா விமலதர்ம, சன் மெட்ச் நிறுவனத்தின் தவிசாளர் தேசமான்ய சூரி ராஜன் மற்றும் ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

EVOLUTION – கொழும்பு நகரத்திலேயே மிகப்பெரிய உடற்பயிற்சி வசதியை High Octane Fitness ஆரம்பித்து வைக்கின்றது

கொழும்பில் துடுகெமுனு வீதியில் அமைந்துள்ள இலங்கையின் பிரத்தியேகமான மற்றும் மிகப்பெரிய உடற்பயிற்சி கூடமான High Octane Fitness ஆனது, தனது புதிய கிளையை ஹெவ்லாக் சிட்டி மிரேகா டவரின் 31வது தளத்தில் EVOLUTION by High Octane எனும் பெயரில் இன்று ஆரம்பித்து வைத்தது. உடற்பயிற்சி சாலைக்கு வருகை தரும் உடற்பயிற்சியாளர்களை உற்சாகப்படுத்தும் வகையில் அமைந்துள்ள இந்த உடற்பயிற்சி நிலையம் இந்தியப் பெருங்கடலின் அற்புதமான 360 டிகிரி காட்சி, கொழும்பு நகரத்தின் வானலை, மலைகளின் காட்சி மற்றும் மறுபுறம் மத்திய கிராமப்பகுதி எனும் எழில் கொஞ்சும் காட்சிகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

2012ம் ஆண்டு கொஹுவெல பிரதேசத்தில் அமைந்துள்ள துடுகெமுனு தெருவில் நிறுவப்பட்ட இந்த High Octane Fitness நிலையம் தேசிய தடகள பயிற்சியாளர்கள் மற்றும் பயிற்றுனர்கள், உலகத்தரம் வாய்ந்த உடற்பயிற்சி உபகரணங்கள், சிறப்பு பிசியோதெரபி, பயிற்சி மற்றும் ஸ்பின் ஸ்டுடியோ போன்ற பல வசதிகளுடன் காணப்படுவதற்கு பெயர்போன ஒரு உடற்பயிற்சி நிலையமாக காணப்படுகின்றது. இலங்கை முழுவதும் உள்ள பல பகுதிகளில் WSO2, UNILEVER போன்ற பல பாரிய நிறுவனங்களில் மற்றும் ஆர்மி பணித்தலைமையிடம் மற்றும் இலங்கை சுங்க கூட்டுத்தாபனம் போன்ற அரசாங்க நிலையங்களிலும் அதே போல மினி உடற்பயிற்சி நிலையங்களையும் நிறுவி பராமரித்து வருகின்றது.

EVOLUTION by High Octane உடற்பயிற்சி நிலையமானது இந்த தரநாமத்தின் புதிய முயற்சியாக காணப்படுவதுடன் இந்த உடற்பயிற்சி கூடமானது 8000 சதுர அடிக்கு மேல் பரந்து காணப்படுவதுடன் அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதிநவீன 2024/25 ஸ்டேட் ஒஃப் தி ஆர்ட் முறையில் வடிவமைக்கப்பட்ட உபகரணங்களைக் கொண்டுள்ளது. இந்த உடற்பயிற்சி நிலையமானது 100 க்கும் மேற்பட்ட உடற்பயிற்சி இடங்கள், நவீன கார்டியோ டிரெட்மில்ஸ், பல குறுக்கு பயிற்சி இடங்கள், பிசியோதெரபி உபகரணங்கள் மற்றும் மீட்பு ஸ்பா, உட்புற ஓட்டம், ஐகெசயசநன ளுயரயெள, லாக்கர் அறைகள் மற்றும் கேஷக் பார் ஆகியவற்றைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது.

இவ் உடற்பயிற்சி நிலையத்தின் இணை ஸ்தாபகரும் தொலைநோக்கு பார்வையாளருமான டேரின் வீரசிங்க ஒரு தேசிய பாரம் தூக்கும் சாம்பியனும், பந்தய கார் சாரதியும் ஆவார், மேலும் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி உலகம் முழுவதும் பல தங்கப் பதக்கங்களை வென்றுள்ள இலங்கை பளு தூக்குதல் அணியின் தற்போதைய தலைவரும் இவராவார். அவர் கருத்துத் தெரிவிக்குகையில் “ஆரோக்கியத்துடன் தங்கள் வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த விரும்பும் இலங்கை பிரஜைகளிற்கு ஒரு நேர்த்தியான அனுபவத்தை வழங்கும் வகையிலேயே EVOLUTION by High Octane உடற்பயிற்சி நிலையமானது அமையப்பெற்றுள்ளது. நீங்கள் காலையிலேயோ அல்லது மாலையிலேயோ உடற்பயிற்சி செய்ய தேர்வு செய்யும்போது மூடுபனி நிறைந்த கொழும்பு வானலையையோ அல்லது இரவு நேரத்தில் மின்விளக்குகளினால் நிறைந்து மின்னும் கொழும்பவை பார்த்தபடியே உடற்பயிற்சி செய்வதை கற்பனை செய்து பாருங்கள்.

அவர் மேலும் கூறுகையில், “இந்த மாபெரும் செயற்றிட்டத்திற்கு எங்களுக்கு ஆதரவளித்த எங்கள் முதலீட்டாளர்கள் மற்றும் பங்குதாரர்களுக்கும் அதேபோல குறிப்பாக நாங்கள் உடற்பயிற்சி நிலையம் ஆரம்பித்தது முதல் எங்களுடன் தொடர்ச்சியாக இணைந்துள்ள விசுவாசமான வாடிக்கையாளர்களுக்கும் நான் எனது நன்றியை தெரிவிக்க விரும்புகிறேன். பல தசாப்தங்களாக எங்களை பெரிதும் ஆதரித்து உற்சாகமூட்டி வருகின்ற எனது மனைவி, குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்கும் மிகவும் நன்றி” என்றும் குறிப்பிட்டார்.

இணை நிறுவனர் அசாந்தி வீரசிங்க அவர்கள் கருத்து தெரிவிக்கையில், “இந்த துறையில் மிகவும் சிறந்த மற்றும் விளையாட்டுகளில் நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்திய பெரும்பாலான இலங்கை தேசிய விளையாட்டு வீரர்கள் என்பவர்களே எமது பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் பயிற்சியாளர்களாக காணப்படுகின்றனர். எங்கள் வாடிக்கையாளர்களை எவ்வாறு ஊக்குவிப்பது மற்றும் அவர்களின் நல்வாழ்வை கவனித்துக்கொள்வது மற்றும் எடை இழப்பு, தசை அதிகரிப்பு அல்லது ஆரோக்கியமான மற்றும் சுறுசுறுப்பான வாழ்க்கை முறையை பராமரிப்பது எவ்வாறு போன்ற அவர்களின் இலக்குகளை அடைய வாடிக்கையாளர்களிற்கு உதவுவது எப்படி என்பது எமது பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் பயிற்சியாளர்களிற்கு தெரியும். அத்துடன் இலங்கை சுற்றுலாவை ஊக்குவிக்கும் வகையில் குறுகிய கால உடற்பயிற்சி வசதிகளை வழங்கி “உடற்பயிற்சி சுற்றுலாத்துறையை” மேம்படுத்துவதற்கும் நாங்கள் பங்களிப்பை வழங்குவதற்கும் எதிர்பார்க்கின்றோம். பல ஆண்டுகளாக High Octane உடற்பயிற்சி நிலையத்தின் மையக்கருவாக காணப்படுவது “நேற்றைவிட இன்று வலிமையாக” என்பதேயாகும். இந்த மையக்கருவானது எங்களிற்கும் எங்கள் தேசத்திற்கும் மிகவும் பொருத்தமானது என நாங்கள் உணர்கின்றோம்” என கூறினார்.

EVOLUTION by High Octane உடற்பயிற்சி நிலையமானது வருடாந்திர அங்கத்தவர் தொகுப்புக்கள் மற்றும் அனைவரிற்கும் பொருத்தமான வகையில் கட்டமைக்கப்பட்ட தவணைத் திட்டங்களை தனது வாடிக்கையாளர்களிற்கு வழங்க எதிர்பார்க்கின்றது. இந்நிலையத்திற்கு புதிதாக இணையவுள்ள அங்கத்தவர்கள் வருடாந்த தொகுப்புக்களை கொள்வனவு செய்வதன் மூலம் இலவச விளையாட்டு உடல் மசாஸ், குறுக்கு பயிற்சி வகுப்புக்கள் மற்றும் இலவச தனிப்பட்ட பயிற்சிகள் எனும் சலுகைகளை பெற்றுக்கொள்ளலாம். மேலதிக தகவல்களுக்கு 0112 123456 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தனது தயாரிப்பு வரிசைக்கு சூழலியல் தயாரிப்பு உறுதிப்படுத்தும் INSEE

INSEE RAPID FLOW PLUS
INSEE MAHAWELI MARINE PLUS
INSEE சங்ஸ்தா சீமெந்து
INSEE EXTRA
INSEE HI-CRETE

சீமெந்து மற்றும் சீமெந்து தொடர்புபட்ட தயாரிப்புக்களைப் பொறுத்தவரையில் முன்னணி உற்பத்தியாளரான INSEE Cement, அதன் முழுமையான தயாரிப்பு வரிசைக்கு சூழலியல் தயாரிப்பு உறுதிப்படுத்தலை (Environmental Product Declaration -EPD) பெற்றுள்ள இலங்கையின் முதலாவது நிறுவனமாக மாறி, வரலாறு படைத்துள்ளது.

நீனு என்பது தயாரிப்புக்களின் ஆயுட்காலத்தில் அவற்றின் சுற்றுச்சூழல் செயல்திறன் தொடர்பில் விரிவான, தரப்படுத்தப்பட்ட மற்றும் மூன்றாம் தரப்பு சரிபார்ப்பு தகவலை வழங்குகின்ற, சர்வதேசரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு தரப்படுத்தலாகும்.

INSEE Cement நிறுவனத்தின் பல்வகைப்பட்ட சீமெந்து மற்றும் சீமெந்து தொடர்புபட்ட தயாரிப்புக்கள் கடுமையான மதிப்பாய்வு, சரிபார்ப்பிற்கு உட்படுத்தப்பட்டு, அதியுயர் மட்டத்தில் நிலைபேற்றியல் தயாரிப்பு தராதரங்களுக்கு இணக்கப்பாடு கொண்டவை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

“கட்டுமானம் என்பது சூழலுடன் எப்போதும் தங்குதடையின்றி இணங்கிப்போகும் வகையிலான ஒரு எதிர்காலத்தையே ஐளேநுநு நிறுவனம் எதிர்பார்க்கின்றது.

எமக்கு EPD சான்று அங்கீகாரம் கிடைத்துள்ளமை அந்த எதிர்பார்ப்பில் முக்கியமான ஒரு படியாக அமைந்துள்ளது,” என்று INSEE Cement நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜான் குனிக் அவர்கள் குறிப்பிட்டார். “எமது வாடிக்கையாளர்களுக்கு உயர் தரம் கொண்ட, சூழல் நேயம்மிக்க கட்டுமானப் பொருட்களை தொடர்ச்சியாக வழங்க வேண்டும் என்பதே எமது இலக்காக உள்ளதுடன், நிலைபேணத்தகு நடைமுறைகளில் எமது புத்தாக்கம் மற்றும் முதலீடுகளை தொடர்ந்தும் முன்னெடுப்போம்,” என்று அவர் தொடர்ந்தும் குறிப்பிட்டார்.